1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, உரிமை யாருக்கு, அரசு அதிகாரிகளுக்கா அல்லது எம்.எல்.ஏ., எம்.பி.க்களுக்கா என்றால், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் கொஞ்சம் நல்ல இடம் வேண்டு மென்பதை ஒப்புக்கொள்கிறேன். அரசு இதைப்பற்றிப் பரிசிலனை செய்யலாம் என்பதைச் சொன்னேன்.

Vocational Training to the Students in Borstal Schools and Certified Schools

* 96. *Q.*—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any vocational training is given to the students in Borstal Schools and Certified Schools to which young delinquents convicted in Juvenile Courts are sent; and

(*b*) if so, the details thereof?

பார்ஸ்டல் & சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள மாணவர்கட்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி.

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறுவர்க்கான நீதிமன்றங்களில் தண்டனை அளிக்கப்பட்ட இளம் குற்றவாளிகள் அனுப்பப்படும் பார்ஸ்டல் பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள மாணவர்கட்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்படு கின்றதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) (1) சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறவர்களுக்கு கீழ்க் காணும் தொழில்களில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது :—

(1) தச்சுத் தொழில்.

(2) கருமார் தொழில்.

(3) புத்தகம் கட்டுதல் (Book Binding)

(4) பாண்டு இசைக்கருவி (Band)

(5) தோட்டத் தொழில்.

(6) தையல்.

(2) அரசினர் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு பள்ளிகளில் கீழ்க்காணும் வாழ்க்கைத் தொழில் பாடங்களில் பயிற்சி அளிக்கப் படுகிறது :—

(1) தையல்.

(2) நெசவு.

(3) பாய்முடைதல்.

(4) தச்சு.

(5) கருமார் தொழில்.

(6) புத்தகம் கட்டுதல்.

(7) உலோகத்தொழில்.

(8) கட்டிடம் கட்டுதல்.

(9) வேளாண்மை-தோட்டத் தொழில்.

(10) பூத்தையல் வேலை, பின்னல் வேலை.

(11) மாணவர்கள் சீர்திருத்தப் பள்ளியில் பாண்டு இசை உட்பட இசை.

(12) கோழி வளர்ப்பு.

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, the trades mentioned by the Hon. Minister are all old-fashioned and outmoded and not suited to the modern industrial age. Will the Government try to introduce training in electric-wiring, motor mechanism, radio mechanism and some such modern techniques which will help them in this modern industrial age?

THE HON. THIRU S. MADHAVAN: It is a good suggestion.

Tamil Nadu Small Industries Development Corporation

*97. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the names of Chairmen of the Tamil Nadu Small Industries Development Corporation during the years 1967 to 1973; and

(*b*) the period for which each of them occupied the post?